**இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம் - 2022**

---------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் '';கூட்டுத்தாபனம்'' 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| உரிய நியமத்துடனான தொடர்புடன் இணக்கமின்மை | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 20(ஆ) பிரிவின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சல் ஆண்டில் பணிக்கொடையாக ஒதுக்கப்பட்ட பணம் ரூபா 729,086 சீராக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 13,999,407 சீராக்கப்பட்டதன் காரணமாக ரூபா 13,270,321 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பட்டோலைகள் மற்றும் பேரேட்டுக் கணக்குகள் இணக்கஞ் செய்து அதன் பிரகாரம் கணக்குகளை சீராக்கி எதிர்காலத்தில் கரிசெய்யப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண விடயங்களின் பயன்தரு ஆயுட் காலம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட போதும் மீளாய்வாண்டு வரையிலும் கூட்டுத்தாபனத்தால் பயன்படுத்தப்படுகின்ற 14 வகுப்புக்களுக்குரிய சொத்துக்கள் பிரதான அலுவலகம் மற்றும் 08 தொழிற்சாலைகளில் காணப்படுகின்ற கூட்டுப்பெறுமதி ரூபா 82,855,275 ஆன சொத்துக்கள் வரலாற்று கிரயத்தில் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் திருத்தப்பட்டு சரியான இழிவுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீட்டு பெறுமதி கணிப்பிடப்பட்டு உரிய நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நிறுவனத்தின் நிதி நிலைமை சரியான உடன் மேற்கொள்ளப்படும். | சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலத்தை மீளாய்வு செய்து சரியான இழிவுப் பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 36 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண விடயங்களை மீள்மதிப்பீடு செய்யும் போது அந்த சொத்துக்களுக்குரித்தான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண வகுப்பு முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். மூன்று | நிறுவனத்தில் காணப்படுகின்ற நிதி நிலைமையின் பிரகாரம் 03 தொழிற்சாலைகளின் மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதியில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொழிற்சாலைகளில் ரூபா 171,904,375 ஆன காணிகளின் மீள்மதிப்பீட்டு பெறுமதியிலும், நான்கு தொழிற்சாலைகளில் ரூபா 371,329 ஆன காணி கிரயத்திலும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், மிகுதி தொழிற்சாலைகள் நிறுவனத்தின் நிதி நிலைமை சீரான உடன் ஒவ்வொன்றாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் பிரகாரம் வரிசை அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 1,000,000 ஆன மூலதன மானியத்தை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளின் பிரகாரம் ஒப்பீடு செய்து சரியான பெறுமதியை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எரகம தொழிற்சாலை அமைந்துள்ள காணியில் 50 ஏக்கர் வாடகைக்கு வழங்கியதால் கிடைத்த பணம் ரூபா 1,800,000 ஆக இருந்ததுடன், வாடகை உடன்படிக்கை காலம் 2022 யூலை 01 முதல் 2023 யூன் 30 வரையாகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய வருமானம் ரூபா 900,000 ஆக இருந்த போதும், ஏனைய வருமானமாக ரூபா 1,800,000 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 இன் கணக்காண்டின் போது சரியான பெறுமதியை கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலப்பகுதிக்குரிய வருமானங்களை சரியான இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்வின் கணிப்பீட்டின் படி கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 2,957,591 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 3,141,426 ஆக இனங்காணப்பட்டு நிலையான வைப்பு முதலீடாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக கிடைக்க வேண்டிய முதலீட்டு வட்டி ரூபா | 2023 இன் கணக்காண்டின் போது பிழைகளை சரிசெய்து சரியான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய கணிப்பிடலின் பிழைகளை சரிசெய்து சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களிள் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2,957,591 குறைவாகவும், ஏனைய வருமானம் ரூபா 183,835 அதிகரித்தும், நிலையான வைப்பு முதலீடு ரூபா 3,141,426 அதிகரித்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகளாக குறைவு ரூபா 1,372,143 ஆக இருந்த போதும் ரூபா 1,595,961 ஆக ரூபா 223,818 இனால் அதிகரித்தும், வியாபார மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் அதிகரிப்பு ரூபா 191,784 ஆக இருந்த போதும், ரூபா 700,739 ஆக ரூபா 508,955 இனால் அதிகரித்தும் மற்றும் செலுத்தப்பட்ட பணிக்கொடை பணம் ரூபா 681,660 ஆக இருந்த போதிலும், ரூபா 725,630 ஆக ரூபா 43,970 இனால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ஆண்டின் நிலையான வைப்பு மற்றும் வட்டி அதிகரிப்பு ரூபா 8,141,426 ஆக இருந்த போதும், வட்டி மீள் முதலீடாக ரூபா 3,264,386 மாத்திரம் காண்பிக்கப்பட்டதன் காரணமாக முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசுப்பாய்ச்சல் ரூபா 4,877,040 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக பரீட்சித்து எதிர்காலத்தில் சரியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்று சரியான பெறுமதியை உள்ளடக்கி தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் மற்றும் அறிக்கைககள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 155,992,714 | 153,750,018 | 2,242,696 | நிலையான சொத்து பதிவேட்டை பரீட்சித்து உரிய சரி செய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சரி செய்தல்களை மேற்கொண்டு சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வியாபார மற்றும் ஏனைய பெற வேண்யடி மீதி | 10,336,101 | 10,112,282 | 223,819 | குறிப்புக்களில் காணப்படுகின்ற மீதிகளை பரீட்சித்து எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (இ) | முற்பணம், வைப்பு மற்றும் முற்கொடுப்பனவுகள் (தொழிற்சாலை முற்பணம்) | 1,191,973 | 768,174 | 423,799 | கணக்குகளின் பிரகாரம் இணக்கம் செய்து அந்த பதிவேடுகளின் பெறுமதியை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | வியாபார மற்றும் ஏயை கடன்கொடுத்தோர் (முகவர் வைப்புக்கள்) | 3,569,975 | 3,069,975 | 500,000 | கணக்குகளின் பிரகாரம் இணக்கம் செய்து அந்த பதிவேடுகளின் பெறுமதியை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | அறவிட வேண்டிய ஏனைய வைப்பு பெறுமதி ரூபா 2,806,875 ஆக இருந்ததுடன், அதில் 03 வருடங்களை விஞ்சிய மூன்று தொழிற்சாலைகளின் மீதி | 1,278,224 | மீதியை அறவிட வேண்டிய தரப்பினர் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இவ்வாறான வழுக்களை எதிர்காலத்தில் குறைக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | உரிய பெறுமதியை சரியாக இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வியாபார மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர் ரூபா 52,408,969 மீதியில் உள்ளடக்கப்பட்ட இரண்டு நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதி | 32,319,927 | மீதிக்கான உறுதிப்படுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | லங்கா செரமிக் லிமிடெட் - (ரூபா 26,226,152.00) நிறுவனம் இலங்கை மட்பாண்ட கூட்டுத்தாபனத்துடன், முன்னர் இருந்த நிறுவனமாக இருந்ததுடன், கூட்டுத்தாபனத்தால் நிறைவேற்றப்பட்ட சேவைகளுக்காக கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய கடன்பட்டோர் தொகையை ஈடுசெய்து மிகுதி | கடன் மீதிகளை செலுத்தி தீர்ப்பதற்கு இனங்காணப்படாத பெறுமதியை இனங்கண்டு கணக்குகளை சரி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தொகை மாத்திரம் செலுத்துவதற்கு உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது. 1990 இற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற பழைய மீதியாக இருந்ததுடன், அந்த தகவல்கள் எதுவும் காணப்படாமையால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 6,093,775 மீதியும் பழைய கடன் மீதியாக இருந்ததுடன், உரிய தகவல்கள் காணப்படவில்லை.

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணம் மற்றும் வைப்பு பெறுமதி ரூபா 12,308,494 ஆக இருந்ததுடன், அப்பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 5,000,000 தொகை மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையில் இருந்து 2012 ஆம் ஆண்டில் இருந்து கிடைக்க வேண்டிய மீதி மற்றும் ரூபா 1,221,666 உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடம் இருந்து கிடைக்க வேண்டிய மீதிகளும் ஆகும். | இவ்வாறான வழுக்கள் எதிர்காலத்தில் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மீதி உறுதிப்படுத்தல்களை பெற்று உரிய அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

#### 1.6.2 செலுத்தவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆம் ஆண்டில் இருந்து கொண்டுவரப்படுகின்ற இலங்கை கனிப்பொருள் கம்பனிக்கு செலுத்த வேண்டிய ரூபா | நிறுவனத்தின் நிதி நிலைமையை கருதி எமது தொழிற்சாலைகள் பொருத்தமான | செலுத்த வேண்டிய பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | 387,275,583 ஆன தொகை மற்றும் பல வருட காலம் முதல் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு 06 வகையான வரிகளுக்காக செலுத்த வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 121,768,339 மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முதலீட்டாளருக்கு வரி செலுத்தியதன் பின்னர் கிடைக்கின்ற வருமானத்தில் இந்த கொடுப்பனவுகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டியதுடன், உரிய தீர்த்து வைத்தல்கள் விரைவாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2004 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 1,993,009 கணக்காய்வு கட்டணம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் நிதி நிலைமை சீராகியதுடன், எதிர்காலத்தில் பகுதி பகுதியாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 770(4)(உ) மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் I ஆம் பகுதியின் 13.2 ஆம் பந்தி | கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்ட 15 வாகனங்கள் விற்றுத் தீர்க்கப்பட வேண்டியிருந்ததுடன், மேலும் 08 வாகனங்கள் ஓட்ட நிலையில் காணப்படாமை இனங்காணப்பட்ட போதிலும், அரச நிறுவனங்களில் உடைந்த நிலையில் உள்ள வாகனங்களை பாவனையில் இருந்து அகற்றுவதற்கு உரிய வழிகாட்டியின் பிரகாரம் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்ல. | ஓட்ட நிலைமையில் காணப்படாத வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்காக தேவையான தகவல்கள் வரிசை அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன, அதற்கான பதில் இதுவரை கிடைக்காமையினால் மீண்டும் இது தொடர்பாக வரிசை அமைச்சுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விற்றுத் தீர்த்தல்களை மேற்கொண்டு அந்த பணிகளை பூர்த்தி செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவு | தயாரிக்கப்பட்ட பெறுகைகள் திட்டத்தில் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட | 2023 ஆம் ஆண்டு முதல் தயாரிக்கப்படும். | உரிய ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன் திட்டங்கள் தயாரித்து அதற்காக உரிய |

| | | |
|---|---|---|
| செலவினம், பெறுகை முறைமை, பெறுகை ஆரம்பிக்கப்படுகின்ற மற்றும் பூர்த்தி செய்யப்படுகின்ற திகதிகள் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | அங்கீகாரத்தை பெற வேண்டியிருந்ததுடன், உரிய நாளது வரையாக்கலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,778,945 இலாபமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 5,054,619 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 724,326 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு விற்பனை வருமானத்தில் ஏற்பட்ட அதிபரிப்பு பிரதான காணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உற்பத்தி அதிகரித்தல், உற்பத்தி செலவினத்தை உள்ளடக்கி ஒட்டுமொத்த செலவினத்தை குறைத்தல், விற்பனை எல்லை மற்றும் விற்பனை பகுதிகளை அதிகரித்தல் போன்ற விடயங்களாக 10 இலக்குகளை பூர்த்தி செய்வதற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட போதிலும், அதற்குரிய நிதி ஏற்பாடு காண்பிக்கப்படாதிருந்ததுடன், செயலாற்றலை அளவிடுவதற்கான பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளும் இனங்கண்டு செயல் முன்னேற்றம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | போதியளவான பிரகாரம் கணக்குகளில் வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கும் போது வருடாந்தம் அடையக் கூடிய இலக்கின் பிரகாரம் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்ததுடன், செயலாற்றலை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்கண்டு மாதாந்தம் செயல் முன்னேற்றம் அளவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இரண்டு தொழிற்சாலைகளில் காணப்படுகின்ற ரூபா 1,595,537 கிரயமாக வாகனங்கள் தொடர்பான விரிவான தகவல்கள் நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த சொத்துக்கள் மெய்மெய்யாய்வு பதிவேட்டின் பிரகாரம் பரீட்சிக்கப்பட்டு தகவல்களை சீராக்கி எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டில் உள்ளபடியான உற்பத்தி அலகுகள் 1,714,289 ஆக இருந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் உற்பத்தி அலகுகள் 1,746,887 ஆகும். அதன் பிரகாரம் உற்பத்தியில் குறைவு அலகுகள் 32,598 அதாவது 2 சதவீதம் ஆகும். கூட்டுத்தாபனத்தின் ஒரு நோக்கமாக உற்பத்தியை 05 சதவீதத்தால் அதிகரித்தல் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் நோக்கத்தில் 05 சதவீத்தால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய போதும், 2022 ஆம் ஆண்டில் நிர்மாண துறையில் ஏற்பட்ட பின்னடைவின் அடிப்படையில் ஓடு இருப்புக்கள் அதிகரித்தமையின் காரணமாக உற்பத்தியை வரையறுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளாத 07 தொழிற்சாலைகள் அமைந்துள்ள காணி கட்டிடங்களை உள்ளடக்கிய சொத்துக்கள் விளைவற்று காணப்படுவதுடன், தொழிற்சாலைகளை நடாத்திச் செல்வதற்காக வருடாந்தம் உற்பத்தி கிரயம் மற்றும் நிர்வாக செலவினமாக ரூபா 10 | பங்கதெனிய தொழிற்சாலை தவிர ஏனைய தொழிற்சாலைகளின் உற்பத்தி செய்யாதிருந்த போதிலும், இருப்பாகவுள்ள பொருட்களை விற்பனை செய்வதற்காக வரையறுக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை சேவையாற்றுவதுடன், இந்த தொழிற்சாலைகளின் | சகல காணிகளினதும் உரித்தினை எழுத்துமூலம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான சொத்துக்களில் இருந்து ஆகக் |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் அளவில் செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. | உரித்தை இலங்கை மட்பாண்ட கூட்டுத்தாபனத்தின் பெயரில் இது வரை கையளிக்கப்படாமையால் தற்போது கோரப்பட்டுள்ள பிரகாரம் காணி அமைச்சிலிருந்து உரித்தை பெற்ற பின்னர் பொருத்தமான முதலீட்டாளருக்கு வாடகைக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | கூடிய பயன்பாட்டை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்கின்ற எரகம மற்றும் மஹியங்கனை தொழிற்சாலைகளுக்கு சொந்தமான 325 ஏக்கர் காணியில் 50 ஏக்கர் அளவான வயல் காணி வெளித்தரப்பினர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட போதிலும், தொழிற்சாலை நிலம் தவிர எஞ்சிய காணி ஆக்கபூர்வமான முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் எரகம வயல் காணிகளில் 3½ ஏக்கர் தனியார் ஒருவர் பிடித்து வைத்திருந்தமை மற்றும் மஹியங்கனை தொழிற்சாலை நிலத்தில் 2015 முதல் அனுமதியற்ற 125 குடியிருப்பாளர்கள் அளவில் இருந்து வருகின்றமை அவதானிக்கப்பட்டது. | பரகம தொழிற்சாலையில் 50 ஏக்கர் வயல் வாடகைக்கு வழங்கி வருமானம் கிடைப்பதுடன், தொழிற்சாலையின் ஏனைய காணிகளில் களிமண்ணைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற காணியாக இருந்ததுடன், காடு வளர்ந்துள்ள பிரதேசங்களும் வயல் மட்டத்தில் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், தனியார் பிடித்து வைத்துள்ள 3.5 ஏக்கர் பகுதியை சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தொடர்புபடுத்தி அதற்காக வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் உரிய வழக்கு தற்போது விசாரணையில் காணப்படுகின்றமை மற்றும் மஹியங்கனை தொழிற்சாலையில் அனுமதியற்ற வகையில் பிடித்து வைத்துள்ள காணி 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் பிடிக்கப்பட்ட காணியாக இருந்ததுடன், இந்த காணி தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் பிரதேச அரசியல்வாதிகள் | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ஆதனங்களில் உச்ச பயன்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தலையிட்டதனால் கையேற்பதற்கு முடியாதிருந்ததுடன் அந்த பகுதியை மீண்டும் கையேற்கும் திட்டமொன்று சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து ஆலோசனைகளை பெற்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2022 இன் பாதீட்டின் பிரகாரம் வருமானம், செலவினம் மற்றும் உள்ளபடியான வருமானம், செலவினத்திற்கு இடையே 26 சதவீதம் முதல் 338 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்மான கட்டுப்பாட்டு கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறான வழுக்கள் எதிர்காலத்தில் குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பாதீடு கட்டுப்பாட்டு கருவியாக ஈடுபடுத்தப்படல் வேண்டும். |